கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,                                                                                    தேதி: **21.04.2025**
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கற்பித்தல் பயிற்சி

விரிவாக்கக் கல்வி இயக்குநரகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU), கோயம்புத்தூர், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், சென்னை மற்றும் வேல் அமிர்தம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சமூக கல்லூரி, கோயம்புத்தூர் ஆகியவை இணைந்து "கற்பித்தல் கலை" என்ற தலைப்பில் மாநில அளவிலான பயிற்சிப் பட்டறையை நடத்தின. இப்பயிற்சி ஏப்ரல் 21 முதல் ஏப்ரல் 22, 2025 வரை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் உள்ள ஃப்ரீமேன் அரங்கில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு முழுவதிலுமிருந்து கூட்டுறவு நிறுவனங்களின் முதல்வர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மற்றும் பொறுப்பு துணைவேந்தர் முனைவர் இர. தமிழ்வேந்தன் அவர்கள் இந்த பயிற்சிப் பட்டறையை ஏப்ரல் 21, 2025 அன்று தொடங்கி வைத்தார். தனது தொடக்க உரையில், பாரம்பரிய கல்வி முறைகள் முதல் தற்கால கல்வி முறைகள் வரை கல்வியின் பரிணாம வளர்ச்சியை அவர் விளக்கினார். இன்றைய மாணவர்களின் கற்றலை மேம்படுத்த, பயனுள்ள பழைய கற்றல் முறைகளை நவீன கற்பித்தல் அணுகுமுறைகளுடன் ஒருங்கிணைக்க வேண்டும் என்று பங்கேற்பாளர்களை அவர் ஊக்குவித்தார்.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூடுதல் பதிவாளர் / நிர்வாக இயக்குநர் முனைவர் கே.சி. ரவிச்சந்திரன் அவர்கள் தலைமை உரையாற்றினார். கூட்டுறவு நிறுவனங்களின் ஆசிரியர்கள் புதிய தலைமுறை மாணவர்களை திறம்பட கையாளுவதற்கு இத்தகைய பயிற்சி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர் வலியுறுத்தினார்.

கோயம்புத்தூர் கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் திரு. அழகிரி காந்திகிராமம் கிராமியப் பல்கலைக்கழகத்தின் மேலாண்மைத் துறையின் கூட்டுறவுத் துறைப் பேராசிரியர் முனைவர் சி. பிச்சை; திருப்பூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் திரு. பழனிசாமி மற்றும் கோயம்புத்தூர் மத்திய கூட்டுறவு வங்கியின் கூடுதல் பதிவாளர் / நிர்வாக இயக்குநர் திரு. ராமகிருஷ்ணன் ஆகியோர்

இந்த நிகழ்ச்சியை வாழ்த்திப் பேசினர். முன்னதாக, வேல் அமிர்தம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சமூக கல்லூரி, கோயம்புத்தூரின் இயக்குநர் முனைவர் எம்.கே. சிவா அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், விரிவாக்கக் கல்வி இயக்குநரகத்தின் பயிற்சிப் பிரிவு பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ந. ஆனந்தராஜா அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

இந்த விரிவான பயிற்சிப் பட்டறை, கற்பித்தல், கூட்டுறவுகளில் சமீபத்திய போக்குகள், கல்வி உளவியல் மற்றும் கற்பித்தல், கற்பித்தல் முறைகள் மற்றும் கற்றல் முறைகள், தகவல் தொடர்பு மற்றும் விளக்கக்காட்சி திறன்கள், பொதுவான கற்பித்தல் திறன்கள், மன அழுத்தம் மற்றும் தூக்கக் கோளாறுகளுக்கான யோகா, மாணவர் உளவியல், வகுப்பறை மேலாண்மை மற்றும் சுகாதார உளவியல் உள்ளிட்ட பல்வேறு முக்கியமான தலைப்புகளை உள்ளடக்கியது. தமிழ்நாடு முழுவதிலுமிருந்து 56 கூட்டுறவு நிறுவனங்களைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் இந்த பயிற்சி அனுபவத்தின் மூலம் பயனடைந்தனர்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***